1979 பிப்ரவரி 17]

திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதன்மூலம் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம்.

*வினா எண் : 79— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்க விற்பனை அதிகாரிகள், மானேஜர்கள், உதவி மானேஜர்கள் யாராவது பணம் கையாடல் செய்துள்ளார்களா?

(ஆ) எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :

(அ) & (ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தக்கோலம் விற்பனை நிலையத்தில் 30–6–77-ல் ரூ. 25,129.84 அளவிற்கு சரக்கு இருப்பு குறைவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தவிர இவ்விற்பனை நிலையத்தில் கடன் விற்பனை வசூல் செய்யப்பட்ட தொகையிலும் ரூ. 16,502.95 குறைவாக இருக்கிறது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.10]

திரு. எஸ். ஜே. இராமசாமி : முதலிலே ரூ. 26,000, அதற்குப் பிறகு ரூ. 16,000 ஆக, ரூ. 42,000 மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் இரண்டு விதமாகச் சொன்னார்கள், ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதை எப்படி வசூல் செய்யப் போகிறார்கள்? வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? கணக்கு தணிக்கை செய்த அதிகாரிகள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இப்படியே விட்டால் சொஸைட்டி உருப்படுமா? யார், யார் தவறு செய்திருக்கிறார்கள்?

இம்மாதிரியே விட்டால் ஒருவர் அல்ல, பல பேர்கள் தவறு செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: தலைவரவர்களே, கோ–ஆப்டெக்ஸ் தனி அலுவலர், காஞ்சிபுரம் உதவி இயக்குநருக்கு அறிக்கை கொடுத்து அதன் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கவிதி 66-ன் கீழ் சட்டரீதியான ஆய்வு மேற்கொள்ள காஞ்சீபுரம் உதவி இயக்குநருக்கு ஆணை யிட்டுள்ளார். காஞ்சீபுரம் உதவி இயக்குநரும் சட்டபூர்வ விசாரணையினை நடத்தி வருகின்றார். விரைவில் விசாரணை அறிக்கை வரப்பெறும். சட்டபூர்வ விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்றமிழைத்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் விற்பனையில் தள்ளுபடி

*வினா எண். 80— திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பெருந்தலைவர் காமராஜ் பிறந்த தினத்தின்போது கைத்தறி துணிகள் விற்பனைக்குத் தள்ளுபடி வழங்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்மி ஜெகதீசன்: பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்ததினத்தை சிறப்பிக்கும் பொருட்டு 7 நாட்களுக்கு 20சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் [*] உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]